திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, டெப்டி லேபர் கமிஷனர், சென்னை-1 அவர்கள்தான் வட ஆற்காடு, தர்மபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களைப் பார்க்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அதிகமான வேலைப்பளு இருக்கிறது. வட ஆற்காடு தர்மபுரி மாவட்டங்களுக்குத் தனியாக டெப்டி லேபர் கமிஷனர் நியமிக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுதுதான் இரண்டு டெபுடி லேபர் கமிஷனர்களை, அதிகமாக நியமிக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்களின் ஆலோசனையைப் பிறகு பரிசீலனை செய்ய லாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் திருநெல்வேலி யில் லேபர் கோர்ட் நிறுவப்படும் என்று சொன்னார்கள். (குறுக் கீடு) டெபுடி லேபர் கோர்ட் நிறுவப்படும் என்று சொன்னார்கள். அது எந்தத் தேதியிலிருந்து செயல்படும் என்பதை அறிவிப்பார் களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலியில் டெபுடி லேபர் கமிஷனர் நியமிக்கப்படுவார் என்றுதான் சொன்னேன். விரைவிலே அவர் அங்கு சேர்ந்து விடுவார்.

ஆற்காட்டில் உள்ள அரசு மருத்துவமனை.

*வினா எண். 93 – திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காட்டில் உள்ள அரசு மருத்துவமனைக்கு கூடுதலாக கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இக்கட்டடங்கள் கட்டும் பணி எப்போது தொடங்கப் படும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, ஆற்காட்டுக்கு ஒதுக்கப்பட்ட 22 இலட்சம் ரூபாய் எஸ்டிமேட் தொகை ரூபாய் 8 இலட்சமாகக் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அவ்வாறு குறைக்கப்பட்டதன் நோக்கம் என்னவென்று தெரியவில்லை. அதை அமைச்சரவர்கள் கவனித்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே ஆற்காட்டிலே முனிசிபல் டிஸ்பென்சரி இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் உள்ள வாலாஜாவில் டிஸ்பென்சரி இருக்கிறது ; வேலூரிலே இருக்கிறது. ஆகவே, இந்த இடத்தை விரிவுபடுத்த வேண்டாம் ; பக்கத்தில் இன்னொரு இடத்தை எடுத்துக்கொண்டு செய்யலாம் என்றகருத்து அரசாங்கத்திற்கு த்தெரிவிக்கப்பட்டது. அருகிலே இருக்கிற இடத்திலே அங்கே புதிதாக ஒரு மருத்துவமனை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்காக நிறைய தொகை—பெரிய தொகை, 21 இலட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்டார்கள். அதற்குப்பிறகு அரசாங்கம் 21 இலட்சம் ரூபாய் என்பது ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது குறைக்க வேண்டும் ; இப்பொழுது இருக்கும் முனிசிபல் ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த 8 இலட்சம் ரூபாய்க்குள்ளே புரப்போசல் அனுப்ப வேண்டுமென்று சொல்லி இப்பொழுது பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டுதான் இல்லை என்று சொன்னேன். எட்டு இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு இப்பொழுது இருக்கும் முனிசிபல் ஆஸ்பத்திரியை விரிவு படுத்த Part II Scheme-இல் 1981–82-ஆம் ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதார அமைச்சரவர்கள் ஆற்காட்டிலுள்ள அரசு மருத்துவ மனைக்குக் கூடுதலாகக் கட்டிடம் கட்டும் யோசனை தற்பொழுது இல்லையென்று கூறினார்கள். ஆற்காடு, வாலாஜா, இராணிப்பேட்டை போன்ற 3 பெரிய நகராட்சிகள் அருகருகே இருப்பதால், அங்கு ஆற்காட்டிலே ஒரு அரசு மருத்துவ மனைக் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மாண்புமிகு சேதுராமன் அவர்கள் கேட்ட கேள்விக்கான பதிலிலேயே அதுபற்றி சொன்னேன். இப்பொழுது இருக்கக்கூடிய நகராட்சியினுடைய ஆஸ்பத்திரியை விரிவுபடுத்துவதற்காக At a total cost of Rs. 21 lakhs திட்டம் தீட்டப்பட்டது. An estimate was prepared and sent by the Chief Engineer, P.W.D. As the estimate cost is very exhortitant. அதற்குப் பிறகு, ரூ. 8 இலட்சம் மதிப்பீட்டில், 24 படுக்கைகளுக்கு ஒரு புது டிசைன் போட்டு, முனிசிப்பல் ஆஸ்பத்திரியோடு ஒட்டி, விரிவுபடுத்த வேண்டிய ப்ரப்போசல்ஸ் கொடுத்திருக்கிறார்கள்.

As per the instructions issued in the Government letter Health dated 11th January 1980, the proposals for the construction of additional buildings to upgrade the Government Dispensary, Arcot into a hospital with 24 beds wlll be submitted to Government for consideration under Part II Scheme for 1981-82.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது, ஆற்காடு டிஸ்பென்சரி விரிவுபடுத்தப்படு மென்றும் தனியாக படுக்கை வசதி கொண்ட ஆஸ்பத்திரி தேவை யில்லையென்றும், பக்கத்திலே, வாலாஜாவிலே பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள் கிறேன். ஆனால், ஆற்காடு, இராணிப்பேட்டை, வாலாஜா மற்றும் அந்த நகராட்சிப் பகுதியிலே இருப்பவர்கள் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டுமானால், வாலாஜாவுக்குத் தான் வரவேண்டும். அங்கு, போதிய படுக்கை வசதிகள் கிடையாது. எனவே, இந்த நகரங்களின் நலனை முன்னிட்டு, வாலாஜா ஆஸ் பத்திரியை விரிவுபடுத்துகிற திட்டமும் படுக்கைகளை அதிக படுத்துகிற திட்டமும் அரசுக்கு உண்டா ? என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே அதைத்தான் சொன்னேன். இப்பொழுது ஆற்காடு ஆஸ்பத்திரியில், இன்ஃபே ஷன்டுக்கு இடம் இல்லை. ஆனால், அங்கு டெலிவரிக்கு ஒரு அறை இருக்கிறது. ஒரு டாக்டர், ஒரு ஃபார்மசிஸ்ட், ஒரு ஸ்டாஃப் நர்ஸ், ஒரு மெட்டர்னிட்டி அசிஸ்டென்ட், ஒரு எம். என். ஏ., ஒரு எஃப். என். ஏ., ஒரு வார்ட் பாய் இருக்கிறார்கள். இன்ஃபேஷன்ட்சுக்கான இடம் இல்லை. ஆனால் டெலிவரி அறை இருக்கிறது. முதலிலே இல்லையென்று தான் சொல்லப் பட்டது. ஆனால், நான் பொறுப்பு எடுத்துக் கொண்ட பிறகு, இதையெல்லாம் மனதிலே கொண்டுதான், ரூ. 8 இலட்சம் செல விலே விரிவுபடுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு அல்ல ; 1981-82 ஆம் ஆண்டு வரும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, ஆற்காடு நகரம் மிகவும் வரலாற்று சிறப்புமிக்க நகரம். ஆற்காடு தொகுதி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தொகுதி. அந்தத் தொகுதி யிலும், அடுத்தும் ஏறக்குறைய் 4 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அதையொட்டி, இராணிப்பேட்டை, வாலாஜா நகராட்சிகள் 3 மைலுக்குள்ளாக அடங்கி இருக்கின்றன. அந்த வாலாஜாவிலே உள்ள மருத்துவ மனையை அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல், விரிவுபடுத்தினால், என் தொகுதி மக்களுக்கும், இராணிப் பேட்டை தொகுதி மக்களுக்கும் சௌகரியங்கள் கிடைக்காது. தற்பொழுது, கிடைக்காத காரணத்தினாலே, ஆற்காடு நகரத் திலே, முன்னாலே, எஸ்டிமேட் போட்டபடி, ரூ. 24 இலட்சம் செலவில் ஒரு மருத்துவ மனையை அரசு நிறுவுமா என்று கேட் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த நேரத்திலே நான் திட்டவட்டமாக வாக்குறுதி அளிக்கிறேன். இன்னும் ஓராண்டுக்குள்ளே, ரூ. 24 இலட்சம் மதிப்புள்ள ஆஸ்பத்திரி புதிதாக வரவில்லை யானாலும்கூட, இப்பொழுது இருக்கிற முனிசிப்பல் ஆஸ்பத்திரியை நல்லமுறையிலே விரிவுபடுத்தி, அங்கே 24 பெட்கள் கொண்ட ஒரு எக்ஸ்டென்ஷன் சென்ட்டர் நிச்சயமாக அமைக்கப்படும். இந்தச் செய்தி, மாண்புமிகு உறுப்பினர் சேதுராமன் அவர்களுக்கு ஓரளவுக்குத் திருப்தி அளிக்கும் என்று நான் கருதுகிறேன்.

புயல் பாதுகாப்பு இல்லங்கள்.

* குறுகிய கால வினா எண்: 55—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புட்பவனம் பஞ்சநதிக்குளம், நடுச்சேத்தி ஆகிய கிராமங்களில் புயல் பாதுகாப்பு இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

(ஆ) ஆம் எனில், இவைகளுக்கு செல்ல அணுகு சாலைகள் இல்லாமல் இருப்பதால் அவைகளை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அவைகளின் மதிப்பீடு என்ன ?

(ஈ) அவை எப்போது முடியும் ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்திலே கட்டப்படுகின்ற புயல் பாதுகாப்பு இல்லங்களுக்கு போக்குவரத்து வசதி சரியில்லை என்பதாலும் சாமான்களை கொண்டு போவதற்கு முடியாமல் போகிறது என்பதாலும், முதலமைச்சர் நிதியில் இருந்து 2,20,000 வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே இந்த இரண்டு இடங்களில் கட்டப்படுகிற புயல் பாதுகாப்பு இல்லங்களைத் தவிர, புதிதாக வேறு இடங்களில் கட்டப்படுகிற அந்த இல்லங்களுக்கு அணுகு சாலை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. அந்தப் பகுதிகளுக்கு சாலை வசதிகள் செய்து கொடுக்க அரசு முன்வருமா ?